இப்போது முதலமைச்சர் சொன்ன கருத்தாகும். ஆனால் இந்த இடைத்தரகர்கள் செய்த தவறுகளைத்தான் இராமகிருஷ்ணன், ஐ. ஏ. எஸ். அவர்களும், சிங் அவர்களும் சுட்டிக்காட்டினார்கள். அப்படிச் சுட்டிக் காட்டியதற்காக அவர்கள் வேலை மாற்றம் செய்யப்படுவானேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அவர்கள் சுட்டிக் காட்டவும் இல்லை; அவர்கள் கடமையை சரிவர செய்யவும் இல்லை. அதுபற்றி எனக்குத் தகவல் கொடுக்கப்படாதது மாபெரும் குற்றம். அந்த இலாகா அமைச்சருக்கு தகவல் சொல்லியிருக்க வேண்டும். இந்த கடிதங்கள் இப்போது வந்து பேசுகின்றனவே, அதுபோல முன்பே பேசியிருந்தால், அந்த போர்டு மீட்டிங்கிற்குப் போவதற்கு முன்பே பேசியிருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது விவாதத்தை முடித்துவிடலாம். இப்படியே போய்க்கொண்டிருந்தால் எப்போது முடியும் என்று தெரியவில்லை. மீண்டும் எப்போது எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னால் நல்லது. நீங்கள் பேசி, அதற்குப் பின்னால் அவர்கள் பேச வேண்டும். இப்போதே ஒன்றரை மணி கடந்துவிட்டது. இன்னும் எவ்வளவு நேரம் ஆகும் என்று தெரியவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இன்னும் 3 மணி நேரத்திற்குமேல் எனக்குத் தேவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் திங்கட்கிழமை காலை 9-00 மணிக்குப் பேரவை கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

176. தமிழ்நாடு 1978–ஆம் ஆண்டு அரிசன நலத் திட்டங்களுக்காக நிலங்களைக் கையகப்படுத்தும் சட்டம் செயலுக்குவரும் நாளினை நிர்ணயிப்பது குறித்தும், தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு அரிசன நலத் திட்டங்களுக்காக நிலங்களைக் கையகப்படுத்துவது

TRUTH ALONE TRIUMPHS

குறித்த விதிகளை உருவாக்குவது தொடர்பாகவும் சமூகநலத் துறையின் 21-9 1979-ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண் 1628ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு அரிசன நலத் திட்டங்களுக்காக நிலங்களைக் கையகப்படுத்தும் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1978) 24 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*31. 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 51/1979).

*32. 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91-அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 52/1979).

*33. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அலுவலர்களை நியமித்தல்) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91-அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1979).

*34. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டமுன் வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதிகளின் 91-அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 54/1979).

*35. 1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சிமன்ற (தனி அலுவலர் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன் வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதிகளின் 91-அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1979).

*36. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91—அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1979).